4. கவன ஈர்ப்பு.

(அ) லாரி உரிமையாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்யப்போவதால் ஏற்படும் நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்ததாக, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு. முதலில், திருவாளர்கள் கே. அர்சுனன், எஸ்.டி. உகம் சந்த், குமரி அனந்தன், எஸ். எஸ். ராமசுப்பு ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர அந்த உறுப் பினர்கள் யாரும் இல்லாததால், அமைச்சர் அவர்கள் அறிக் கையை அவைக்கு அளிக்கலாம்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அறிக்கையை அவைமுன் வைக்கிறேன்.

அறிக்கை

டீசல் பெட்ரோல் மற்றும் டயர் போன்றவைகளின் விலையை நிர்ணயம் செய்வது மைய அரசு சம்பந்தப்பட்ட தாகும். சமீபத்தில் மைய அரசின் வரவு செலவு திட்ட அறிக்கையில், மேற்காணும் பொருட்களுக்கு மைய அரசு கூடுதல் விலை நிர்ணயம் செய்துள்ளது; எல்.பி.ஜி. கேஸ் பாரத்தை ஏற்றிச் சென்று விநியோகிக்கும் லாரிகளுக்கு கூடுதல் வாட கைக்கான கோரிக்கை பரிசீலிக்க வேண்டியது மைய அரசின்கீழ் இயங்கும் எண்ணெய்க்கழகங்களைச் சார்ந்ததாகும். இது சம்பந்தமாக மைய அரசும் மற்றும் அதன் எண்ணெய் கழகங்களும் தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (Oil Corporations)

10-55 மணி

(ஆ) குத்தாலம், நரிமணம் பகுதிகளிலிருந்து சென்னைக்குக் கனரக வண்டிகளை எண்ணெய், இயற்கை எரிவாயு நிறுவனம் அனுப்புவதால் சாலைகள் பழுதுபடுவது குறித்தும் அந்நிறுவனம் நெடுஞ்சாலைத் துறைக்குத் தொகை கொடுக்காதது குறித்தும்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கீழ்த் தஞ்சை மாவட்டம் குத்தாலம் நரிமணம் பகுதிகளில் இருந்து எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் சென்னைக்கு கனரக வண்டிகளை அனுப்புவதால் சாலைகள் பழுதுபட்டு வருவதால் அந்நிறுவனத்திடமிருந்து